# பெரம்பலூர் நகராட்சி

**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் – 20 ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 20-03-2020 | **பொருள் 01 :** இந்நகராட்சியில் கொரோனோ வைரஸ் தடுப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நகரில் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (அரசாணை எண்.97 தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை) நாள்.15.03.2020–ன் அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/ஜே1/2020 நாள். 09.03.2020 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போதைய ஆய்வுக்கூட்ட மற்றும் நேரடி அறிவுரைகளின்படியும் பெரம்பலூர் நகர் முழுவதும் கொரோனோ வைரஸ் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மிகவும் அவசர மற்றும் அத்தியாவசிய பொதுசுகாதார உபகரணங்கள், கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் தேவைப்படுகிறது. எனவே, கொரோனோ வைரஸ் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கான பொருட்களை வாங்குவதற்கு வருவாய் நிதி அல்லது நகராட்சி நிர்வாக ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் **ரூ.30.00 இலட்சத்திற்கு** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. இந்நகரில் கொரோனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் பொதுசுகாதார உபகரணங்கள், கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களை குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகோரி தேவைகேற்ப அவ்வப்போது வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி, நகராட்சி நிர்வாக ஆணையர் அல்லது மாவட்ட அட்சித்தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண்:1783/2020/எச்1</u> | நகர்மன்றத் தீர்மான எண். 292 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 20-03-2020 | **பொருள் 02 :** பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.25.00 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் பணிகள் மேற்கொள்ள பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயல்முறை உத்தரவு கடித செ.மு.எண். அ5/2213/2019 நாள். 12.02.2020 ம் தேதிய நாளிட்ட கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி மதிப்பீட்டுத் தொகைக்கு பணி மேற்கொள்ள 18.03.2020 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பெரம்பலூர் அவர்கள் வழியாக தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்கண்டவாறு தினசரி நாளிதழில் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>1. தினமலர் Amav Media Bill No. 379 ரூ. 21,672<br>2. தினந்தந்தி Bill No. AT 408/19-20<br>மேற்கண்ட தொகையினை விளம்பரம் வெளியிட்ட தினசரி நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ.கு**<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்:000607/2020/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 293 அனுமதிக்கப்பட்டது |

20-03-2020

**பொருள் 03 :** இந்நகராட்சியில் சொத்துவரி விதிப்புகள் (Assessment) Dashboard–ல் Invalid Assessment with Demand in DCB என்ற தலைப்பில் சொத்துவரியினத்தில் தகுதியற்ற வரிவிதிப்புகளாக உள்ளதாகவும் அதனை கணிணியில் இருந்து நீக்கம் செய்திட வேண்டுமெனவும் புள்ளி விவரக்குறிப்பாளர் தனது **13.03.2020**ம் தேதிய குறிப்பின் மூலம் தெரிவித்துள்ளார். புள்ளிவிவரக்குறிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ள இனங்களை வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளரின் குறிப்பிற்கு அனுப்பியதில் மேற்படி வரிவிதிப்பு களஆய்வு செய்து மேற்படி வரிவிதிப்புகளுக்கு தகுதியான வரிவிதிப்புகள் உள்ளதாகவும் இவை அனைத்தும் தகுதியற்ற வரிவிதிப்புகளாக உள்ளதால் அதனை நீக்கம் செய்யலாம் எனவும் சான்றளித்துள்ளனர். எனவே, புள்ளிவிவரக்குறிப்பாளர் குறிப்பு, வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளரின் சான்று ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியற்ற சொத்துவரி விதிப்புகள் 57–யும் அதற்குண்டான கேட்புத்தொகை **722310/-ஐ** கணிணியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வருவாய் உதவியாளர்கள் பெயர்** | **வார்டு எண்கள்** | **மொத்த வரிவிதிப்பு எண்கள்** | **நீக்கம் செய்யப்படும் தொகை (2015-2016 முதல் 2019-2020)** |
|---|---|---|---|---|
| 1 | திரு.மகேஸ்வரன் | 1, 2, 5 | 19 | 21,992 |
| 2 | திரு.அப்லோசன் | 6, 7, 14, 15, 19 | 10 | 5,533 |
| 3 | எஸ். சாமிகண்ணு | 8, 9, 16, 20, 21 | 15 | 1,893 |
| 4 | சு. கண்ணன் | 10, 11, 12, 17 | 13 | 6,92,892 |
| | | **மொத்தம்** | **57** | **7,22,310/-** |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

புள்ளிவிவரக்குறிப்பாளரின் குறிப்பு, வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளரின் ஆய்வின் மேலான சான்று ஆகியவற்றின் அடிப்படையில் 57 தகுதியற்ற வரிவிதிப்புகளையும் அதற்குண்டான தகுதியற்ற கேட்புத்தொகை **ரூ.7,22,310/-ஐ** நீக்கம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2788/2020/அ1

நகர்மன்றத் தீர்மான எண் 294 அனுமதிக்கப்பட்டது

// ஒம் // திரு . S. குமரி மன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி

# பெரம்பலூர் நகராட்சி

**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் – 31ம் நாள் செவ்வாய் கிழமை மாலை 5.00 மணி அளவில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31-03-2020 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி கொரணா வைரஸ் தடுக்கும் விதமாக நாடு முழுவதும் தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்கும் நிலையில் பொதுமக்கள் அவசிய அத்தியாவசிய பொருட்கள் வாங்க தினசரி மார்கெட் செல்ல முடியாத நிலை உள்ளதாலும் பொதுமக்கள் கூட்டமாக நகர் பகுதியில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு அவசிய அத்தியவாசிய பொருட்கள் வாங்க முடியாத நிலையினை கருத்தில் கொண்டு கொரணாவைரஸ் பரவுதலை தடுக்கும் பொருட்டு , புதிய பேருந்து நிலையத்தை ஆய்வு செய்து தற்காலிக சந்தையை அமைக்க ஏதுவாக உடனடியாக சாலையில் உள்ள குண்டும் குழிகளை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளஅறிவுறுத்தியுள்ளார்கள். மாவட்ட ஆட்சியரின் நேரடி மற்றும் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள குண்டும் குழிகளை செப்பனிட ரூ. 9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் , பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் , அதனை பொது நிதியில் ஈடு செய்து கொள்ள அறிவுரை வழங்கியுள்ளதை தொடர்ந்து தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி உடனடியாக செய்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதால் பணிக்குரிய நிதியினை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மேற்கண்ட செலவினத் தொகையை வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ளவும் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்படி பணியை செய்து முடிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 002133/2020/இ1 | நகர்மன்றத் தீர்மான எண். 295 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31-03-2020 | **பொருள் 02 :** இந்நகராட்சியில் உலகளாவிய கொரோனோ வைரஸ் தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினிகள், பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் தளவாட சாமான்கள் ஆகிய பொருட்களை சப்பை செய்வதற்கு 30.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொருட்களை சப்ளை செய்வதற்கு இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்கள். மேற்படி பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினிகள், பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் தளவாட சாமான்கள் சப்ளை செய்வதற்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைகப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண் 296 அனுமதிக்கப்பட்டது |

| **வ. எண்** | **பொருட்களின் விபரம்** | **பொருட்களின் அளவு / எண்ணிக்கை** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரம்** | |
|---|---|---|---|---|
| | | | **Green Land Engineering Works and Services** | **Chennai Chemicals and Equipment Agencies, Melachinthamani, Trichy** |
| 1 | பிளிச்சிங் பவுடர் | 1 கிலோ | 58 | 52 |
| 2 | கை சுத்தம் செய்யும் கிருமி நாசினிகள் (Sanitizer) | 1லிட்டர் | 295 | 283 |
| 3 | முககவசம் | 1 எண்ணிக்கை | 16 | 12 |
| 4 | கை உறைகள் | 1 எண்ணிக்கை | 80 | 75 |
| 5 | முழு உடற்கவசம் | 1 எண்ணிக்கை | 1900 | 1875 |
| 6 | கை கழுவும் சொலியுசல் | 1 லிட்டர் | 360 | 348 |
| 7 | சோப்பு கரைசல் | 1 லிட்டர் | 290 | 276 |
| 8 | சோடியம் ஹைபோ குளோரைடு சொலியுசன் 1% | 1 லிட்டர் | 15 | 13.80 |
| 9 | கொரோனோ வைரஸ் விழிப்புணர்வு அறிவிப்புகள் (நோட்டீஸ்) | 1 எண்ணிக்கை | 2.10 | 1.90 |
| 10 | கொரோனோ வைரஸ் விழிப்புணர்வு பதாதைகள் | 1 எண்ணிக்கை | 1350 | 1275 |
| 11 | மிஸ்ட் பவுடர் பிலேயர் இயந்திரம் | 1 எண்ணிக்கை | 28500 | 25125 |

| வ. எண் | பொருட்களின் விபரம் | பொருட்களின் அளவு / எண்ணிக்கை | நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரம் | |
|---|---|---|---|---|
| | | | Green Land Engineering Works and Services | Chennai Chemicals and Equipment Agencies, Melachinthamani, Trichy |
| 12 | வாகனத்தில் வைத்து மருந்து தெளிக்கும் ஸ்பிரேயர் இயந்திரம் | 1 எண்ணிக்கை | 26000 | 24375 |
| 13 | ஹேன்ஸ் ஸ்பிரேயர் (பெரியது) | 1 எண்ணிக்கை | 5100 | 4850 |
| 14 | ஹேன்ஸ் ஸ்பிரேயர் (சிறியது) | 1 எண்ணிக்கை | 2100 | 1615 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்டுள்ளவாறு பொதுசுகாதார கிருமிநாசினிகள், பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் தளவாடச்சாமன்கள் சப்ளை செய்வதற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் **Chennai Chemicals and Equipments Agencies, Melachinthamani, Trichy** என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்கள். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி பெற்று பொருட்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>31-03-2020</td>
<td>

**பொருள் 03 :** இந்நகராட்சியின் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020** ஆம் ஆண்டு நிதியின் கீழ் பெரம்பலூர் நகராட்சி எளம்பலூர் ரோடு கிழக்கு குடிநீர் கிணறு II ஆழப்படுத்துதல் பணிக்கு 18.03.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 5.00 இலட்சம்**

<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>439235</td><td>(–) 0.23%<br><br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>442320</td><td>0.47% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

**அ.கு.**

மேற்கண்ட பணிக்கு திரு.M/s. ஏழுமலையான் கான்டிராக்டர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.23%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : 000607/2019/இ1

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 297 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31-03-2020 | **பொருள் 04 :** இந்நகராட்சியின் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020** ஆம் ஆண்டு நிதியின் கீழ் **பெரம்பலூர் நகராட்சி எளம்பலூர் ரோடு கிழக்கு குடிநீர் கிணறு III ஆழப்படுத்துதல்** பணிக்கு 18.03.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**மதிப்பீடு தொகை : 5.00 இலட்சம்**<br><br>(table below)<br><br>**அ .கு.**<br><br>மேற்கண்ட பணிக்கு திரு.M/s. ஏழுமலையான் காண்டிராக்டர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.39%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் : 000607/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 298 அனுமதிக்கப்பட்டது |

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர்களின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திரு. M/s. ஏழுமலையான், காண்டிராக்டர் ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 437251 | (–) 0.39% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 440883 | 0.43% மதிப்பீட்டை விட அதிகம் |

<table>
<tr>
<td>31-03-2020</td>
<td>
பொருள் 05 : இந்நகராட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 ஆம் ஆண்டு நிதியின் கீழ் பெரம்பலூர் நகராட்சி வடக்கு மாதவி ரோடு ஒடச்சகுளம் மேற்கு பகுதி குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல் பணிக்கு 18.03.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
மதிப்பீடு தொகை : 5.00 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>434961</td><td>(–) 0.12%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>D. ராஜேந்திரன்</td><td>437030</td><td>0.35% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>
மேற்கண்ட பணிக்கு திரு. முகமது இக்பால் , பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.12%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண் : 000607/2019/இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 299 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31-03-2020</td>
<td>
பொருள் 06 : இந்நகராட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019- 2020 ஆம் ஆண்டு நிதியின் கீழ் துறைமங்கலம் ஏரி KVK ரெடிமிக்கஸ் அருகில் உள்ள குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல் பணிக்கு 18.03.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீடு தொகை : 5.00 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>439225</td><td>(–) 0.24%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>443155</td><td>0.66% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>
மேற்கண்ட பணிக்கு திரு.M/s. ஏழுமலையான் கான்டிராக்டர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.24%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண் : 000607/2019/இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 300 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31-03-2020</td>
<td>

**பொருள் 07 :** இந்நகராட்சியின் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019- 2020** ஆம் ஆண்டு நிதியின் கீழ் **பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு அருகில் உள்ள குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல்** பணிக்கு 18.03.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 5.00 இலட்சம்**

<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>439125</td><td>(–) 0.26%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>442685</td><td>0.55% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

**அ.கு.**

மேற்கண்ட பணிக்கு திரு.M/s. ஏழுமலையான் கான்டிராக்டர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.26%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : 000607/2019/இ1

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 300 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

// ஒம் // திரு . S. குமரி மன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி